THE NEW INDIAN EXPRESS
VILLUPURAM
03 VILLUPURAM THURSDAY 28.12.2023

# JIPMER launches robotic surgery training course for resident doctors

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

IN a pioneering initiative aimed at fostering advanced medical expertise, Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER) conducted its inaugural Robotic Surgery Training Course for Resident Doctors. Spearheaded by Dr Rakesh Aggarwal, Director, and Dr L N Dorairajan, Medical Superintendent, the programme aims to equip the next generation of surgeons with essential skills in robotic surgery.

The training course, a milestone in JIPMER's history, was inaugurated at a ceremony where Prof Gautam Roy, officiating Director, stressed on the importance of robotic surgery.

"The training will enable resident doctors to familiarise themselves with cutting-edge technology. It will equip them not only to assist in robotic-assisted surgeries but also to perform simple procedures under supervision," noted Prof Roy. He also underscored the pivotal role of the trainees in disseminating these skills to other medical centres across the country, post their tenure at JIPMER.



Dr Bibekanand Jindal, Officer-in-Charge of the Robotic Surgery Unit, explained the comprehensive nature of the training programe. He noted that participants from various surgical departments engaged in the course, conducted using the Da Vinci Robotic Surgical System.

This distinctive course, a first in a central government institution, not only equips trainees with practical skills but also significantly augments their morale and confidence. Supported by Intuitive Surgicals India Private Ltd, the certificates awarded to the trainees hold global recognition.

The Medical Superintendent lauded the dedication of the trainees and emphasised on the multi-faceted benefits of the training course. JIPMER has successfully performed over 1,500 robotic surgery procedures in the last six years.

THE TIMES OF INDIA, CHENNAI
THURSDAY, DECEMBER 28, 2023

AROUND THE STATE IN 80 WORDS

# Jipmer holds maiden robotic surgery training

Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) organized the first robotic surgery training course for resident doctors in the institute, according to a release. The course aimed to impart skills in robotic surgery to the resident/ trainee doctors, who form the next generation of surgeons. The trainees will disseminate the skills acquired by them to other centres in the country, which they may join after completing their training at Jipmer.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
28.12.2023 (வியாழக்கிழமை)

ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில்

# ரோபோடிக் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்

கோரிமேடு, டிச.28-

புதுவை கோரிமேட்டில் உள்ள ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சமீபத்தில் முதலாவது ரோபோடிக் அறுவை சிகிச்சை உள்ளிருப்பு பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கு தொடங்கியது. இதன் திட்டம் உள்ளிருப்பு பயிற்சி மருத்துவர்களுக்கு ரோபோடிக் அறுவை சிகிச்சையில் திறன்களை வழங்குவதை நோக்கமாக கொண்டது.

பயிற்சியை முடித்த முதல் பிரிவு மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால், மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், பொறுப்பு இயக்குனர் பேராசிரியர் கவுதம்ராய் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

NAMATHU நமது முரசு MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

புதுச்சேரி Puducherry 27.12.2023 புதன்கிழமை wednesday Volume : 18 Issue: 327 PAGE 6 Rs:7 சோபகிருது ஆண்டு மார்கழி 11ஆம் தேதி

# ஜிப்மர் பயிற்சி டாக்டர்களுக்கு ரோபாடிக் ஆபரேஷன் பயிற்சி

புதுச்சேரி, டிச.27-

நாட்டிலேயே முதல் முறையாக பயிற்சி மருத்துவர்களுக்கு ஜிப்மரில் ரோபாடிக் அறுவை கிசிச்சை பயிற்சி வகுப்பு நடந்துள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் 1,500-க்கும் மேற்பட்ட ரோபாடிக் அறுவை சிகிச்சை ஜிப்மரில் நடந்துள்ளது.



புதுவை ஜிப்மரில் ரோபோ மூலம் ஆபரேஷன்கள் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 6 ஆண்டுகளில் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டோருக்கு ரோபோடிக் ஆபரேஷன்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் உள்ளிருப்பு பயிற்சி டாக்டர்களுக்கு ரோபோடிக் ஆபரேஷன் குறித்து சமீபத்தில் பயிற்சி நடத்தப்பட்டது.

பயிற்சி முடித்த டாக்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதுகுறித்து ஜிப்மர் பொறுப்பு இயக்குனர் கவுதம்ராய் கூறுகையில்,

இந்த ரோபோடிக் பயிற்சியின் மூலம் உள்ளிருப்பு பயிற்சி டாக்டர்கள் புதிய தொழில்நுட்பத்தை அறிந்துள்ளனர். இதன் மூலம் சிறப்பு நிபுணர்களுக்கு உதவ முடியும். ஆபரேஷன்களில் எளிய நடைமுறைகளை மேற்கொள்ளலாம். பயிற்சி பெற்ற டாக்டர்கள் நாட்டில் உள்ள மற்ற மையங்களுக்கும் தங்கள் திறன்களை கொண்டு செல்வார்கள் என்றார்.

ரோபோடிக் அறுவை சிகிச்சை பிரிவின் பொறுப்பு அதிகாரி டாக்டர் பிபேகானந்த் ஜிண்டால் கூறும்போது, இந்த பயிற்சி முகாமில் அனைத்து துறைகளை சேர்ந்த டாக்டர்களும் பங்கேற்றனர். டாவின்சி ரோபோடிக் ஆபரேஷன் முறையில் நடத்தப்பட்ட இந்த பயிற்சி வகுப்பு, நாட்டில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் முதன்முறையாக ஜிப்மரில் நடத்தப்பட்டுள்ளது. இது பயிற்சி டாக்டர்கள் திறனை மேம்படுத்தி, மன உறுதி, நம்பிக்கையை அதிகரிக்க செய்துள்ளது. அவர்களுக்கு சர்வதே அங்கீகார சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் கூறுகையில்,

இந்த பயிற்சியின் மூலம் ஜிப்மருக்கு வரும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தலாம். ஜிப்மர் கடந்த 6 ஆண்டுகளில் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சைகளை செய்துள்ளது. இது மக்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது என்றார்.